[1973 மார்ச் 29

தமிழ்நாடு மாநிலத் தொழிலாக்கக் கழகம் (சிப்காட்)

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு மாநிலத் தொழிலாக்கக் கழகம் (சிப்காட்) அனைத்து நாட்டு வங்கிக் கூட்டிணைப்பு உதவித் திட்டம் (Consortium Aid) ஏதேனும் வகுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

பி.ப. 4-20 மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வணிக வங்கிகளின் உடனுழைப்புடன், தொழில் முனைவர்களுக்கு பெரும் அளவில் கடன் வசதிகளைச் செய்து தருவதே இணை நிதியுதவித் திட்டத்தின் (Consortium Aid) நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், தொழில் பிரிவு ஒன்றுக்கு, உயர்ந்த அளவு அப்பிரிவின் நிலையான இருப்பின் 75 சதவீதத்திற்குத் தவணைக் கடன்களாக வழங்கப்படும். அதில் 50 சதவீதம், வணிக வங்கிகளிடமிருந்து சாதாரண முறையிலும் எஞ்சிய 25 சதவீதம் "சிப்காட்" (SIPCOT) துணை நிதியாகவும் வழங்கப்படும்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே. தனியார் துறையில் தொழில்கள் தொடங்குவதற்காகத்தான் இந்தத் திட்டம் வழங்கப் பட்டிருக்கின்றது என்று அறிகின்றேன். இந்தத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்ட தொழில் ஏதாவது இருக்கின்றதா? அந்தத் தொழிலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உதவித்தொகைபற்றி அறிவிக்க முடியுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது வரை கொடுத்ததாகத் தகவல் இல்லை.

Assistance under the E.S.I. Scheme towards Medical Charges

*1. S.N. *Q.*—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the State Government have taken any steps to enhance the quantum of assistance permitted by the E.S.I. Corporation to the employees who come under the E.S.I. Scheme towards the medical charges since the present allotment is too low; and

(*b*) if so, the benefits accrued therefrom ?

1973 மார்ச் 29]

தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ் மருத்துவ வகை செலவு, களுக்காக அனுமதித்து உள்ள தொகை.

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ், தொழிலாளர் களுக்கு மருத்துவ வகை செலவுகளுக்காக, இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் அனுமதித்து உள்ள தொகை மிகக் குறைவாக இருப்பதால், அதனைக் கூடுதலாக்க மாநில அரசு நடவடிக்கைகள் ஏதும் மேற்கொண்டு உள்ளதா?

(இ) ஆமெனில், அவைகளின் மூலம் ஏற்பட்ட பலன்கள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் மருத்துவ வசதிக்கான செலவின் மேல் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம் உச்ச வரம்பினை நிர்ணயித்துள்ளது. இந்த உச்சவரம்புப்படி தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம் 7/8 பங்கும் மாநில அரசு 1/8 பங்கும் ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த உச்சவரம்பிற்கு மேல் ஆகும் செலவை மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும். மத்தியத் தொழிலாளர் நல அமைச்சருடன் நான் கலந்துரையாடியபோது இந்த உச்ச வரம்பினை நீக்குவது பற்றியும், அது இயலாவிடின் உச்சவரம்பின் வீதத்தை மிகுந்த அளவு உயர்த்துவது பற்றியும் வலியுறுத்தினேன். மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. காட்டூர் கோபால் : தலைவரவர்களே, இதன்மீது ஏற்கனவே நம்முடைய மாநில அரசின் சார்பாக ஒரு குழு மத்திய அரசினிடம் போய்ச் சிந்தித்திருக்கின்றது. நீண்ட நாட்களாக இதற்குப் பரிகாரம் கிடைக்காத காரணத்தால், இதை அவசரப்படுத்திப் பெறுவதற்கு அரசு ஏதாவது முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, நமது மாநில அரசின் சார்பில் சென்ற அந்தக் குழு அங்கேயிருக்கின்ற அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியதில் ரூபாய் 56-லிருந்து ரூ. 63

[1973 மார்ச் 29

ஆகவும், விரிவாக்கப்பட்ட மருத்துவ வசதிக்கு ரூ. 60-லிருந்து ரு. 67 ஆகவும், முழு மருத்துவ வசதிக்கு ரூ. 70லிருந்து ரூ. 80 ஆகவும் உச்ச வரம்பினை தற்பொழுது உயர்த்துவது என்று தொழிலாளர் ஈட்டுறுதி கழகம் முடிவு எடுத்துள்ளது. இருந்தாலும், அதைப்பற்றி அதிகாரப் பூர்வமான அறிக்கை வரவில்லை. விரைவில் அந்த அறிக்கை ஈட்டுறிதிக் கழக சார்பில் வந்து சேருமென்று நம்புகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have received messages from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1973 and the Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1973, as passed by the Legislative Assembly.

(2) பேரவையிலிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have also received messages from the Deputy Speaker, Legislative Assembly, transmitting copies of the Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1973 (L.A. Bill No. 9 of 1973) and the Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1973 (L. A. Bill No. 10 of 1973), as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bills are Money Bills within the meaning of Artcle 199 of the Constitution of India.

(3) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3.30 p.m. today, the following further programme of business has been decided :